**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 - 2023**

---

விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873– எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பீ.3 இன் II ஆம் பிரிவின் 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுதொழில் விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். முதலீட்டு தயார்படுத்தல் உதவி, விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதம் எனும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,051 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105.15 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 11,700.61 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 61.05 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 8,451 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 44.10 மில்லியன் மிகுதித் தொகை பயனாளிகளினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் பின்னோக்கி நிதியளித்தலின் கீழ் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதி | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396 | செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான மூன்று காசோலைகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்கள் கடந்துவிட்டன. அந்த காசோலைகள் 2023 திசெம்பர் 31 இற்குள் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுமிருக்கவில்லை. | 2024 யூன் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் இரண்டு காசோலைகள் மட்டுமே ஆறு மாதங்களுக்கு மேல் இருந்ததுடன் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள்கணக்கெடுப்பு அளவை சபையின் நியமனம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு அருகில் செய்யப்பட வேண்டும். வருடாந்த பொருள் கணக்கெடுப்பு அளவை சபையின்நியமிக்கப்படவில்லை. | ஏஎஸ்எம்பீ அறிக்கையுடன் உடன்படுகிறது. ஆயினும்கூட, 2024 சனவரி இல் பீஓஎஸ் ஐ மேற்கொள்ள நாங்கள் குழுவை நியமித்துள்ளோம் | வருடாந்த பொருள்கணக்கெடுப்பு அளவை சபையின் நியமனம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 757 -1(ஆ) மற்றும் 2(ஆ) | வருடாந்த பொருள்கணக்கெடுப்பு அளவை சபை ஒவ்வொரு பொருட்களையும் சரிபார்த்த தேதியின்படி இருப்புப் புத்தகத்தில் காட்டப்பட்டுள்ளதைச் சரிபார்த்து, படிவம் ரீ மற்றும் ஏ. 66 இல் காணப்படும் வேறுபாட்டை உள்ளிட வேண்டுமென்பதுடன் அவை நான்கு மடங்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். படிவத்தின் பிரதி சரிசெய்தலுக்கு ஆதரவாக இருப்பு பற்றுச்சீட்டாக தாக்கல் செய்ய சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு அனுப்பப்பட வேண்டும். கணக்கெடுப்பின் போது | பீஓஎஸ் 2023 இல் சில தவறுகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்கின்றோம். அடுத்த பீஓஎஸ் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்படும் என ஏஎஸ்எம்பீ உறுதியளிக்கின்றோம். | பின்வமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் வருடாந்த பொருள்கணக்கெடுப்பு அளவை சபை ஒவ்வொரு பொருட்களையும் இருப்பு புத்தகத்தில் காட்டப்பட்டுள்ள மீதியுடன் சரிபார்க்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருள் கணக்கெடுப்பு உறுப்பினர்கள் நிதிப் பிரமாணம் 757 -1(ஆ) 2(ஆ) இனை பின்பற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | நிதிப் பிரமாணம் 760 | பின்பற்ற வேண்டிய நடைமுறை நிதிப் பிரமாணம் 102 மற்றும் தொடர்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்புக்கள், பங்கு புத்தகங்கள் ஏனையவற்றை உரிய அதிகாரத்துடன் களஞ்சியங்கள் பதிவழிக்க வேண்டும். மேற்கண்ட நடைமுறை சரியாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பீஓஎஸ் 2023 இல் சில தவறுகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்கின்றோம். அடுத்த பீஓஎஸ் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்படும் என ஏஎஸ்எம்பீ உறுதியளிக்கின்றோம். | இருப்புப் புத்தகத்தை நாளதுவரையாக்க நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 திகதியிட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | தேசிய ஒழுங்குபடுத்தல் குழு (என்எஸ்சீ) கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் மூன்று என்எஸ்சீ கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. | மாற்றப்பட வேண்டியது தேசிய ஒழுங்குபடுத்தல் குழு இலலையென்பதுடன் செயற்திட்ட வழிநடத்தல் குழுவாகும். செயற்திட்ட வழிநடத்தல் குழுக்கள் முன்பு நிறுவப்படவில்லையெ ன்பதுடன் சபைக் கூட்டங்கள் பிரச்சினைகளை விவாதிப்பதற்கான முக்கிய மன்றமாக இருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் குழுக் கூட்டம்(என்எஸ்சீ) நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2022 திசெம்பர் 23 ஆந் திகதிய எஸ்ஈசீ/2022/ஈ/03 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | ரூபா 100,000க்கு மேல் மாதாந்த ஒப்பந்தத்திற்கு டபிள்யூஎச்ரீ இல் 5 சதவீதம் கழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜீஐஎஸ் ஆலோசகருக்கு மாதந்தோறும் ரூபா 150,000 செலுத்த செயற்திட்டம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான ஜீஐஎஸ் ஆலோசகருக்கான செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 1.62 மில்லியன் தொடர்பாக அண்ணளவாக ரூபா 81,000 டபிள்யூஎச்ரீ தொகை கழிக்கப்பட்டு உள்நாட்டு வருமான வரி திணைக்களத்திற்கு செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எஸ்ஈசீ/2022/ஈ/03 சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். இது பீஎம்யூக்கு அறிவுறுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் படி டபிள்யூஎச்ரீ ஐக கழித்து செலுத்தப்பட வேண்டும். |

## 03. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2017 சனவரி 17 இல் தொடங்கப்பட்டதுடன் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 இற்குள் 86 சதவீத இலக்கிடப்பட்ட செயன்முறையை முடிக்கப்பட வேணடியிருந்தது. இருப்பினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 69 சதவீதம் மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தததது. | ஏஎஸ்எம்பீ- கூறு 1 இன் கீழ், 2023.03.31 இன்படி அங்கீகரிக்கப்பட்ட துணைத் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 1,424 ஆகும். இருப்பினும், பரிசீலனை திகதியின்படி, 672 செயற்திட்டங்கள் மட்டுமே தங்கள் பணிகளை முடித்து நிதி வழங்கலைப் பெற்றுள்ளன. அதற்கு மேலதிகமாக, 666 துணை செயற்திட்டங்கள் அதன் நிலைகளில் அண்ணளவாக 50 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன. எனவே, 2023.12.31 வரை, 69 சதவீத முன்னேற்றம் மட்டுமே அடையப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். | குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைகள் முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாரம்பரிய நெல் பயிரிடல் செயற்திட்டம் மற்றும் சுகாதாரமான மற்றும் உயர்தர அரிசி நூடில்ஸ் உற்பத்தித் செயற்திட்டத்திற்கான திறமையின்மை காரணமாக அரசாங்கம் ஏற்படுத்திய செலவில் ரூபா 12 மில்லியன் பலனை இழந்துள்ளது. | இந்த நிறுவனம் எந்த அரசாங்க மானியத்தையும் பெறவில்லை எனச் ஏஎஸ்எம்பீ1 உறுதிப்படுத்தியமையால், ஏஎஸ்எம்பீ இணைத்தல் மானியத்தின் அனுமதிக்கு முன், ஏஎஸ்எம்பீ மானியத்திலிருந்து 8 மாதங்களுக்குப் பிறகு எஸ்ஏபீீ வழங்கிய மானியத்திற்கு ஏஎஸ்எம்பீ1 பொறுப்பாகாது. | கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் போன்ற உள்ளூராட்சி அதிகாரிகளின் ஊடாக உண்மைகளை வெளிக்கொணர வேண்டும். |
| (இ) | விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்- பகுதி 01 பரபோவா எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் 2019 பெப்ரவரி 19 அன்று 10 மில்லியன் கிரயத்தில் முழுமையாக தானியங்கு அரிசி நூடில்ஸ் தயாரிக்கும் இயந்திரத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையொப்பமிட்டிருந்ததுடன் ஒப்பந்தத் தொகையில் 90 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தாலும், அரிசியிலிருந்து நூடில்ஸ் உற்பத்தி செய்வதற்கு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | பொருந்தக்கூடிய மானிய ஒப்பந்தத்தின்படி, ஏஎஸ்எம்பீ1 ஆனது பரபோவா எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் கையொப்பமிட்டுள்ளதுடன் 1வது மற்றும் 2வது தவணை அங்கீகரிக்கப்பட்ட மானியம் ஒப்புக் கொள்ளப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் அடைந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். எனவே, 1வது மற்றும் 2வது பகுதி நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றத்தை சரிபார்த்த பிறகு ரூபா 9 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்தலைப் பெறுவதற்காக எதிர்பார்த்த பணிகளை இலக்கிடப்பட்ட நேரத்திற்குள் முடித்து பயனாளிகளுக்கு பணம் வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நூடில்ஸ் உற்பத்தி இயந்திரம் நிறுவப்பட்ட கட்டிடத்தில் வயரிங் மற்றும் விளக்குகள் போடுதல் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் பரவபோவ எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் நூடில்ஸ் உற்பத்தி தொடங்கப்படவில்லை.<br>விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி01 ஐ நடைமுறைப்படுத்துவதன் முக்கிய நோக்கமான விவசாயப் பொருட்களின் உற்பத்தியை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு வழிநடத்துவது என்பது நிறைவேற்றப்படவில்லையென்பதுடன் எதிர்பார்த்த ஏற்றுமதி வருமானம் அடையப்படவில்லை. | நிறுவனம் இப்போது அரிசி நூடில்ஸ் தயாரிக்கும் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளதுடன் சில வாரங்களுக்கு முன்பு, ஐடிஐ சோதனை அறிக்கைகளைப் பெற்ற பிறகு, தயாரிப்புகள், ஸ்பாகெட்டி (சிவப்பு மற்றும் வெள்ளை) மற்றும் வெர்மிசெல்லி (சிவப்பு மற்றும் வெள்ளை) ஆகியவற்றின் 200 கிராம் நுகர்வோர் பொதிகள் சந்தையில் நிறுவனம் அச்சிடப்பட்ட பேக்கிங் பொருட்களைப் பெற்ற பிறகு அடுத்த மாதத்திற்குள். வெளியிடப்படும். | ஏஎஸ்எம்பீ பகுதி 01 செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக செயற்பட வேண்டும். |
| (உ) | நியூற்றி குறப் (பிறைவேட்) லிமிட்டட் ஆனது 2019 ஏப்ரல் 17 இல் உள்ளுர் மற்றும் சர்வதேச உணவு, அழகுசாதனப் பொருட்கள், விருந்தோம்பல் மற்றும் மருந்து சந்தைகளுக்கு இயற்கையான பொருட்களைத் தயாரித்து, ஆண்டுக்கு யூஎஸ்டி 600,000 அந்நியச் செலாவணியை ஈட்டும் நோக்கத்துடனும் ஜீஎம்பீ, ஐஎஸ்ஓ, எச்ஏசீசீபீ, பீஆர்சீ ஆர்கானிக் மற்றும் நியாயமான வர்த்தக சான்றிதழ்கள ஆகியவற்றைப் பெறுகிறதுடன் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை பகுதியில் உருவாக்குகிறது நிறுவனம் 2021 யூலை 20 அன்று வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் திட்டத்துடன் ஒப்பந்தம் செய்து ரூபா 15 மில்லியன் பொருந்தல் மானியத்தை பெறுவதற்கும் அதில் 2023 திசெம்பர் 31 இற்குள் ரூபா 13.5 மில்லியன் வழங்கப்பட்டது. ஆனால் நியூட்ரி க்ராப் (பிரைவேட்) லிமிடெட் 2023 திசெம்பர் 31 வரை உற்பத்தியைத் தொடங்கியிருக்கவில்லை. | 2023 திசெம்பரில் வணிகரீதியான உற்பத்தி தொடங்கப்படாவிட்டாலும், தொழிற்சாலையின் செயல்பாட்டிற்கான மூன்று கட்டமான மின்சாரம் பெற இயலாமையால், மார்ச் 2024 இல் பிராந்திய பொருந்தல் மானிய முகாமையாளர் செயற்திட்டத்திற்கு வருகை தந்தபோது தொழிற்சாலை செயல்பாடுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. | எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் இலக்கிடப்பட்ட நேரத்திற்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (ஊ) | ஸ்ரேய் நசுறல்ஸ்(பிறைவேட்) லிமிட்டட் தொடர்பான அவதானிப்பு | | |
| | 2020 திசெம்பர் 31 இல், விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம், இலங்கை மசாலாப் பொருட்களைப் பயன்படுத்தி பெறுமதி கூட்டப்பட்ட அத்தியாவசிய எண்ணெய்களை உற்பத்தி செய்வதற்கும், எதிர்கால | துணை செயற்திட்டம் தொடர்பான தேவையான ஆவணங்களை முன்மொழிபவரால் சமர்ப்பித்த பிறகு, பீஎம்யூ இல் உள்ள இரண்டு முகாமையாளர்கள், சட்ட மேலாளர் மற்றும் நிதி மேலாளர் ஆகியோர் | செயற்திட்டம் தொடங்குவதற்கு முன் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் மற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகங்களுக்கு ஏற்ப மேலாண்மை செயல்முறையை மேம்படுத்துவதற்கும் ஸ்ரேய் நசுறல்ஸ்(பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ரூபா 77.93 மில்லியனுக்கு பொருந்தக்கூடிய மானியம் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, அதாவது 2020 திசெம்பர் 28 இல் முதல் பொருத்த மானியத் தொகையான ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, இரண்டாவது மற்றும் மூன்றாவது பொருத்த மானியத் தவணைகள் வழங்கப்படவில்லை. இதனால், பொருந்தக்கூடிய மானியங்களை வழங்குவதில் விரும்பிய நோக்கங்கள் அடையப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சட்டப்பூர்வ அனுமதி மற்றும் நிதி அனுமதி வழங்க தங்கள் பொருள் பகுதி தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்கின்றனர். | முன்பு காசோலைகள் எழுதப்படக்கூடாது.<br><br>பொது நிதி வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (எ) | நெவில் இன்டஸ்ரிஸ்(பிறைவேட்) லிமிட்டட் தொடர்பான அவதானிப்பு | | |
| | நெவில் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிடெட்டானது விவசாயத்துறை இயந்திரங்களைத் தயாரிக்கும் நிறுவனமானதுடன் விவசாயத்துறை இயந்திரங்களை உற்பத்தி செய்தல், வினைத்திறனான கொம்போஸ்டேட் உர உற்பத்திக்காக சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்காக ஆலோசனை சேவைகளை வழங்கல், உள்ளூர் உற்பத்தி மூலம் இலங்கை பொருளாதாரத்திற்கு உதவுதல், தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்முறையினூடாக முற்பண இயந்திரங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட 8 நோக்கங்களை அடைவதற்காக பொருந்தக்கூடிய மானியமாக ரூபா 30 மில்லியனைப் பெறுவதற்கு 2023 யூன் 06 அன்று விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது 2023 திசெம்பர் 31 க்குள் நிறுவனம் மேற்கண்ட நோக்கங்களை அடையத் தவறியதைக் காண முடிந்தது. | 2023 யூன் 06 அன்று பொருந்தக்கூடிய மானியத்தின் முதல் தவணையை வெளியிட்டு சுமார் 06 மாதங்கள் மட்டுமே 2023 திசெம்பர் 31க்குள் கடந்துவிட்டன. 1வது தவணை தொடர்பான நடவடிக்கைகளுக்கு மட்டும் முதலீடு செய்யும் போது எட்டு நோக்கங்களை அடைய முடியாதுடன் இது மொத்த முதலீட்டை முடித்த பிறகு இருக்க வேண்டும். தொழிற்சாலை கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன், 1வது பகுதிக்கான இயந்திரங்களும் வாங்கப்பட்டு தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளன. பகுதி 1 செட்டில் செய்வது தொடர்பான ஆவணங்கள் மற்றும் பில்கள் மானியம் பெற்றவரால் சமர்ப்பிக்கப்பட்டு, இரண்டாம் தவணையை வெளியிட ஏஎஸ்எம்பி மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | இலக்கிடப்பட்ட காலப்பகுதியினுள் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | இறால் வளர்ப்புக்கான தீவன உற்பத்தித் தொழிற்சாலையைத் தொடங்குவதை நோக்கமாகக் கொண்ட கிறீன் அகுவா புறடக்சன் (பிறைவெட்) லிமிட்டட் உள்ளூர் இறால் விவசாயிகளுக்கு குறைந்த விலை | அந்நியச் செலாவணி நெருக்கடி மற்றும் கட்டுமானப் பொருள் தட்டுப்பாடு காரணமாக கட்டுமானப் பணிகள் தாமதமாகி வருகின்றன. இந்த கட்டுமானமானது சிக்கலானது | இலக்கிடப்பட்ட காலப்பகுதியினுள் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சிறந்த தரமான தீவனத்தை வழங்குதல், நாட்டின் மொத்த இறால் தீவனத் தேவையில் 25 சதவீதத்தை பூர்த்தி செய்தல், மூலப்பொருட்களுக்கான நிலையான விநியோகச் சங்கிலியை உருவாக்குதல் மற்றும் பகுதி மற்றும் விவசாயப் பகுதிக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற நோக்கங்களிற்காக 2022 பெப்ரவரி 07 அன்று விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்துடன் ரூபா 93.8 மில்லியன் பொருந்தல் மானியத்தை பெறுவதற்கு ஒப்பந்தம் செய்தது. 2023 திசெம்பர் இல் உள்ளவாறு முதல் மற்றும் இரண்டாவது மானியத் தொகையாக ரூபா 84.42 மில்லியன் பெறப்பட்டது. 2023 ஒக்தோபர் 20 அளவில் 35,000 கிலோ இறால் தீவனம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது, இதனால், நிறுவனத்தின் நோக்கங்கள் மோசமான நிலையில் இருந்தன. இலங்கை அரசாங்கம் வழங்கிய மானியங்களில் இருந்து விரும்பிய நோக்கங்களை அடையாததன் காரணமாக இலங்கை அரசாங்கம் செயற்திட்டத்தின் நன்மைகளை இழந்திருந்தது. | மற்றும் 80 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புடையது. இது மிகவும் சவாலானது மற்றும் எதிர்பார்த்ததை விட அதிக நேரம் தேவைப்பட்டது. திட்டமிட்டபடி இரண்டாவது தவணை நடவடிக்கைகளின் கீழும் நிர்மாணப்பணிகள் தொடரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2024 பெப்ரவரி இல் பிராந்திய பொருத்துதல் மானிய முகாமையாளர் கள ஆய்வை மேற்கொண்டபோது, கட்டிடக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துடன் 2023 ஆகஸ்ட் இல் உற்பத்தி தொடங்கப்பட்டதாக மானியம் பெற்றவர் தெரிவித்தார். | முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | எக்கோ என்வி லங்கா (பிறைவெட்) லிமிட்டட் உள்ளூர் மூலப்பொருட்களை பெறுவதன் மூலம் உயிர் சிதைக்கக்கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கிற்கான கரிம மாற்றுகளை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி வசதிகளை நிறுவுவதற்கு ஆரம்பிக்கப்பட்டது. கம்பனி 2021 நவம்பர் 25 இல் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்துடன் ரூபா 24.89 மில்லியன் பொருத்த மானியம் பெற ஒப்பந்தம் செய்து கொண்டது. 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு, முதல் மற்றும் இரண்டாவது மானியத் தொகையாக ரூபா 22.40 மில்லியன் பெறப்பட்டது. மூன்றாவது மானியத் தவணை 2023 திசெம்பர் 31 இல் பெறப்படவில்லை. ஏற்றுமதிச் சந்தையில் நுழைவது, பாரம்பரிய கைவினைப் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்தல், இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் மூலப்பொருட்களுக்கு மாற்றாக உற்பத்தி செய்தல் மற்றும் சந்தையில் வெற்றிகரமாக நுழைவது ஆகிய நிறுவனங்களின் நோக்கங்கள் அடையப்படவில்லை. | இந்த கம்பனியின் கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்களை நிறுவுவதற்கு ஒரு வருடத்திற்கும் மேலாக எடுத்துக்கொண்டது மற்றும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இந்த நிலைமை மிகவும் சாதாரணமானது மற்றும ஏஎஸ்எம்பீ இன் கீழ் இதே போன்ற பிற துணைத் திட்டங்களுடன் கூடிய அனுபவம் உள்ளது. மானியம் பெறுபவர் இரண்டாவது தவணைச் செலவுகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளதால், மூன்றாவது தவணையை வெளியிடுவது பீஎம்யூ இல் நிலுவையில் உள்ளது மற்றும் மானியம் வழங்குபவர் சமர்ப்பித்த ஆவணங்களைச் சரிபார்ப்பது பீஎம்யூ ஊழியர்களின் விஷயமாகும். | எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியினுள் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு செயற்திட்டம் செயற்பட வேண்டும். |
| (ஒ) | வனாதவில்லுவ ஆர்கானிக் கேஷ்யூ லிமிடெட் தொடர்பான அவதானிப்பு | | |
| | வனாதவில்லுவ ஆர்கானிக் கேஷ்யூ லிமிடெட் நிறுவனத்திற்கு 2020 மார்ச் 02 அன்று சமர்ப்பிக்கப்பட்ட மானிய விண்ணப்பம் 21 மாதங்களுக்குப் பிறகு 2022 திசெம்பர் 01 அன்று செயற்திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது. | வனாதவில்லுவ ஆர்கானிக் கேஷ்யூ லிமிடெட் (கம்பனி) இல் 54 உறுப்பினர்களுக்கு 2022 திசெம்பர் 1 இல் செயற்திட்டத்திற்கான நிர்வாக சபை ஒப்புதல் | இலக்கிடப்பட்ட காலப்பகுதியினுள் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ரூபா 32.40 மில்லியனில் முதல் மானியமாக ரூபா 9.72 மில்லியன் 2023 ஏப்ரல் 28 அன்று வழங்கப்பட்டது மற்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவது மானியம் 2023 டிசம்பர் 31 வரை வழங்கப்படவில்லை. மற்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவது மானியம் 2023 டிசம்பர் 31 வரை வழங்கப்படவில்லை. அதன்படி, நிறுவனம் 2023 திசெம்பர் 31 அளவிலும் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கவில்லை. | பெறப்பட்டது. 9 உறுப்பினர்களின் சொந்த நிதிப் பங்களிப்பை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக சபையின் அனுமதிக்குப் பிறகு, நிறுவனம் அந்த 9 உறுப்பினர்களின் அங்கத்துவத்தை ரத்து செய்துள்ளது. அதற்குப் பதிலாக 9 உறுப்பினர்கள் கம்பனியில் இணைந்ததுடன் அத்தகைய உறுப்பினர்களுக்குரிய ஆவணங்கள் பீஎம்யூக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 25.6.2024 இல் இரண்டாவது பகுதி வழங்கப்பட்டது. | முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ஜீஐஎஸ் ஆலோசகர் 2023 திசெம்பர் முதல் கணக்காய்வுத் திகதி வரை தனது வேலை செய்த அறிக்கையை முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கவில்லை. எனவே, 2023 திசெம்பர் இன் ஜீஐஎஸ் ஆலோசனைக் கட்டணமான ரூபா 150,000 வசூலிக்கப்படவில்லை. அதன்படி, ஜீஐஎஸ் ஆலோசகரின் கடமைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை நிதிநிலை அறிக்கைகளில் சரியாகப் பிரதிபலிக்கவில்லை என்பதும், செயற்திட்டமானது அவரது பணியை முறையாகக் கண்காணிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | மேலும் அவர் தனது வேலை செய்த அறிக்கைகளை இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்று செயற்திட்டத்தின் ஜீஐஎஸ் ஆலோசகருக்கு அறிவுறுத்தப்பட்டது. தேவைப்படும் போது, ஜீஐஎஸ் ஆலோசகர் கடுமையாக உழைத்து வார இறுதி நாட்களில் தனது பணிகளைச் செய்து முடிப்பார். அவர் செயற்திட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். எவ்வாறாயினும், அவர் தனது பணி முடிந்த அறிக்கைகளை உடனடியாக அனுப்ப உறுதியளித்துள்ளார். | ஆலோசனையின் செயல்திறனை அதிகரிக்க செயற்திட்டத்தின் செயல்பாடுகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டு நான்கு பொருந்தக்கூடிய மானியத்திற்கான ரூபா 20.84 மில்லியன் பெறுமதியான காசோலைகள் எழுதப்பட்டதுடன் ஆனால் அந்த காசோலைகள் வழங்கப்படாமல் 2023 வரை கையில் இருந்தன. அந்த காசோலைகள் 2023 ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டதையும், அந்த தொகை திரும்பப் பெறுதல் மானியமாக 2023 நிதிநிலைமைக் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் அந்தத் தொகையால் அதிகமாகக் கூட்டப்பட்டிருந்தது. | காசோலைகள் எழுதப்பட்டு, முன்மொழிபவரின் நிலைத்தன்மை இல்லாத காரணத்தால், முன்மொழிபவருக்கு ஒப்படைக்கப்படவில்லை. பணம் திரும்பப் பெறுவது கடினம் என்றால், ஆபத்தைத் தவிர்க்க அது செய்யப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றிற்கு மேல் இருந்தது எப்படியிருந்தாலும் 2023 ஆம் ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றின் இறுதி முடிவு சரியான முறையில் உள்ளது. | அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டவுடன் நிதி விடுவிக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2017 சனவரி 17 இல் தொடங்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஐடிஏ கடனினால் ஒதுக்கப்பட்ட யூஎஸ்டி 61.05 மில்லியனில் யூஎஸ்டி 43.32 மில்லியன் மட்டுமே இந்தத் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 70 சதவீதமாக இருந்தது. எனவே, மீதமுள்ள ஒரு வருட காலப்பகுதியை மீதி நிதிகளுடன் கருத்தில் கொள்ளும்போது, நிதியின் பயன்பாடு வினைத்திறனற்றதாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டம் 2023 யூலை இல் மறுசீரமைக்கப்பட்டதுடன் புதிய செயற்திட்ட மதிப்பின்படி யூஎஸ்டி 48.620 மில்லியனாக குறைக்கப்பட்ட மொத்த செயற்திட்ட பெறுமதி கிட்டத்தட்ட 80 சதவீத நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. | திட்டத்தின் இனங்காணப்பட்ட இலக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இச் செயற்திட்டம் மீளாய்வாண்டிற்கான மீளச் செலுத்தக்கூடிய வெளிநாட்டுக் கடனுக்கான ஒதுக்கமான ரூபா 4,000 மில்லியனிலிருந்து ரூபா 1,275 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. எனவே, மொத்த ஒதுக்கீட்டில் 68 சதவீதத்தை குறிக்கும் ரூபா 2,724 மில்லியன் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்படவில்லை. | வெளிநாட்டு கடனின் கீழான ஜீஓஎஸ்எல் ஒதுக்கீடு (12) ரூபா 4000 மில்லியனானதுடன் ரூபா 1,275 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. ஒதுக்கீட்டின் மீதி ரூபா 2,724 மில்லியன் ஆகும். எனினும், 31/12/2024 செயற்திட்ட காலத்திற்குள் யூஎஸ்டி 48.620 மில்லியன் கடன் ஒதுக்கீட்டை பயன்படுத்தியிருக்க முடியும். | செயற்திட்டத்தின் இலக்கை திட்டமிட்டபடி செயற்திட்ட கால எல்லைக்குள் முடிக்க வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ஈரீஎவ் பங்களிப்பை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் ஈரீஎவ் தண்டப்பண கட்டணம் ரூபா 66,218 செலுத்தப்பட்டது. ஊழியர்களின் அறக்கட்டளை நிதி சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இந்தத் தொகையை 2024 ஏப்ரல் 08 அன்று செயற்திட்டம் செலுத்தியது. | ஈரீஎவ் ஐ செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க, தற்சமயம் நாங்கள் ஈரீஎவ் ஐ ஆன்லைனில் செலுத்தி எந்த தாமதமும் இன்றி புதுப்பிக்கிறோம். | நிதிப் பயன்பாட்டின் செயல்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | தகவலின்படி, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 99 சிறிய அளவிலான செயற்திட்டங்களும் 65 பெரிய அளவிலான | பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் கள சோதனை நடத்தப்பட்டது. இது ஆர்எம்ஜிஎம்களுடன் அவர்கள் | செயற்திட்டமானது நோக்கங்களை அடையும் வகையில் செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயற்திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன. செயற்திட்ட ஒப்பந்தத்தின்படி முடிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கான எந்த நிறைவு அறிக்கையும் கணக்காய்வுத் திகதியிலுள்ளவாறு விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தால் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தங்கள் வேலையை முடித்த ஆதரவாளர்களுக்கு அதை அனுப்புவதற்கான வழிமுறைகளுடன் மின்னணு வடிவத்தில் பகிரப்பட்டது, ஆதரவாளர்கள் இப்போது செய்திகளுக்கு பதிலளிக்கின்றனர். |

### 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வாகனங்கள் ஓட்ட அட்டவணை சரியாக பராமரிக்கப்படவில்லை. மேலும், 2023 ஆம் ஆண்டின் கடைசி ஆறு மாதங்களாக ஐந்து வாகனங்களுக்கான வாகனங்கள் ஓட்ட அட்டவணை் சமர்ப்பிக்கப்படவில்லை. கடந்த ஆறு மாதங்களாக அந்த வாகன ஓட்டிகளின் மேலதிக நேரமும் (ஓரி) மற்றும் பயணச் செலவுக்கான (பட்டா) கொடுப்பனவும் செயற்திட்டத்தால் செலுத்த வேண்டியிருப்பதுடன் 2024 யூலை 15 அளவில் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த ஐந்து வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் விசாரிக்கப்பட்டு, சமர்ப்பிப்பதற்காக உள்ளன. ஏஎஸ்எம்பீ ஓட்டுனர்களின் உறுதிப்பாட்டின்படி, மேலே குறிப்பிட்ட வாகனத்திற்கான அனைத்து ஓரி மற்றும் பட்டா கட்டணங்களையும் முறையே 2024 யூலை 15 க்கு முன்) அவர்கள் கோரியுள்ளனர். | வாகனம் ஓட்ட அட்டவணை நாளதுவரையாக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஊழியர் கொடுப்பனவுகள் முறையாக செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | செலற்றா ரெக் (பிறைவேட்) லிமிட்டட் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தல் துறையில் இருக்கும் பலவீனங்களைச் சமாளித்து மிகவும் பயனுள்ள முறையை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அக்ரோ-விஸ் எனப்படும் கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பை நிறுவுவதற்கான திட்ட முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளது. 2020 திசெம்பர் 30 அன்று செலற்றா ரெக் (பிறைவேட்) லிமிட்டடுடன் அந்த செயற்திட்ட முன்மொழிவுக்கு விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 37.860 மில்லியன் பொருந்தக்கூடிய மானியம் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. மானியத்தைப் பயன்படுத்தி ரெக் (பிறைவேட்) லிமிட்டடால் வாங்கியது போல் வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்காக கொள்வனவு வெய்யப்பட்ட தொழில்நுட்ப உபகரணங்களை பௌதீக ரீதியாக ஆய்வு செய்யாமல் செயற்திட்டம் முதல் மற்றும் இரண்டாவது மானியத் தவணைகளாக ரூபா 34.074 மில்லியனைச் செலுத்தியது. | செலற்றா ரெக் (பிறைவேட்) லிமிட்டட்ஸ்மார்ட் அக்ரோ ஒருங்கிணைப்பு தளத்தை செயல்படுத்துவதற்கு ரூபா 37.86 மில்லியன் பொருந்தல் மானியம் அதிகபட்சமாக அங்கீகரிக்கப்பட்டது.டன் 2020 திசெம்பர் 30 அன்று பொருந்தல் மானியம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டதுடன் ரூபா 18,825,450 தனது சொந்த பங்களிப்பில் இருந்து தேவையான மீதி நிதியை சரிபார்த்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட பொருத்த மானியத்தின் முதல் தவணையாக வெளியிடப்பட்டது. 2022 யூன் 29 அன்று அடையப்பட்ட நிதி மற்றும் பௌதீக ரீதியான முன்னேற்றத்தை சரிபார்த்த பிறகு, அங்கீகரிக்கப்பட்ட மானியத்தின் திருத்தப்பட்ட 2வது தவணையாக ரூபா 11,241,800 வெளியிடப்பட்டது. எனவே வழங்கப்பட்ட மொத்த மானியத் தொகை ரூபா 30,067,250 ஆகும். செயற்திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லாததால், | நிதியங்கள் வெளிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பீஎம்யூ முன்னேற்றத்தைப் பின்தொடர்ந்து, நிறுவனத்துடன் பல சந்திப்புகளை நடத்தி, மேலும் தாமதமின்றி நடவடிக்கைகளை முடிக்குமாறு அவர்களுக்குத் தெரிவித்துள்ளது. | |
| (இ) | செலாட்டா டெக் (பிறைவேட்) லிமிடெட் வழங்கிய திட்ட முன்மொழிவு மற்றும் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் ஒப்புக் கொள்ளப்பட்ட செயற்திட்ட இலக்குகளின் படி, ஐந்தாண்டு காலத்திற்கான அக்ரோ-விஸ் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தனித்தனியாக அடைய வேண்டிய இலக்குகளை தெளிவாகக் கூறியுள்ளது. 2023 திசம்பரில் இத்திட்டம் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், முதல் ஆண்டின் இறுதியில் அடைய வேண்டிய இலக்குகளை அடைய முடியவில்லை. | நிறுவனம் எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றத்தை அடையத் தவறியதை பீஎம்யூ சரிபார்த்து செயற்திட்டத்தை உள்ளகக் கணக்காய்வாளருக்கு அனுப்பியது. பெறப்பட்ட அனைத்து மானிய நிதிகளையும் பொருந்தக்கூடிய வட்டியுடன் திருப்பித் தருமாறு பதிவு செய்யப்பட்ட அஞ்சலின் கீழ் நிறுவன இயக்குநர்களுக்கு இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. (மொத்தத் தொகை ரூபா 43,861,252/- திரும்பப்பெற வேண்டும்). தெரிவிக்கப்பட்டபடி கம்பனி பெற்ற மானிய நிதியை திரும்ப செலுத்தத் தவறினால், வழங்கப்பட்ட மானிய நிதியை திரும்பப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படும். | திட்டமிடப்பட்ட காலத்தினுள் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |

## 3.6 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு தீர்க்கப்படாதுள்ள விடயங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|
| பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2019/021/1/02/-04 இன் கீழ், எவ்ஜீடி/சீஓ/2020/2/24 கொத்தணி செயற்திட்டத்தின் மூலம் பழந்திரியகொட ஏகமுத்து கப்ருக சங்கத்தின் 50 உறுப்பினர்களுக்கு ரூபா 700,000 மதிப்புள்ள கயிறு அரைக்கும் இயந்திரங்களை வாங்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் 25 அன்று தலா ரூபா 120,000 என அங்கீகரிக்கப்பட்ட குழுக்களுக்கு அதிகமாக 202 பேருக்கு ரூபா 2,424,000 செலவு வைக்கப்பட்டது. கயிறு தயாரிப்புகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட தொழில்முனைவோர் குழுவின் முன்னேற்றம் தென் மாகாண இணை மானிய முகாமையாளரால் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்படவில்லை. | கிளஸ்டர் செயற்திட்டத்திற்கு 202 நபர்களுக்காக ரூபா 2,828,000 இற்காக எவ்ஜீடி/சீஓ/2020/2/24 இன் கீழ் இனுமதி பெறப்பட்டது. பெருந்தோட்ட அமைச்சின் கீழ், ”கப்ருக நிதி முகாமைத்துவ சபை”, ”பழந்திரியகொட ஏகமுத்து கப்ருக சொசைட்டி” செயற்திட்டத்தை (இணைப்பு I) ஒருங்கிணைக்கும் பொறுப்பில் உள்ளது. மேலும், அவர்கள் மற்ற தரவுகளையும் தகவல்களையும் எடுத்துச் சென்றதுடன மேலும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனம் காரணமாக பீஎம்யூ மேற்கண்ட குழுவை நம்பியது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக, சபையின் கோரிக்கையின் பேரில் பணம் கிடைத்தது. எவ்வாறாயினும், தெற்கு ஆர்எம்ஜீஎம் 2021 மார்ச் இல் பீடீயீடம் ஒருங்கிணைப்பு | வேலையானது உரிய பொறுப்பானவர்களின் மேற்பார்வையின் கீழ் இருக்க வேண்டும். |

அதிகாரி மாற்றப்பட்டதாகக் கூறியது, மேலும் அவர்கள் இந்த விஷயத்திற்கு பொறுப்பேற்கும் ஒரு சபை அதிகாரியை அடையாளம் காண்பதில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டனர் (இணைப்பு II). இப்பிரச்சினை குறித்து பீஎம்யூ இதுவரை தொடர்பு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.